காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி செயலாளர்,மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் தலைமையில்,பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர்,பகுதி துணை செயலாளர்கள் பன்னீர்செல்வம்,பா.கவிதா,துரை இளங்கோவன், பா.டில்லி, பி.ஜே.வேந்தன்,என்.கே.ரவிச்சந்தின்,இரா.கந்தவேலு,ரா. கோகுல், சு.மனோகரன் ஆகியோர் முன்னிலையில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர்,அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றி ஆலோசனை வழங்கி கழக முன்னோடிகள் எச்.முகமது அப்பாஸ்,மா.சுகுமாரன்,பி.ஸ்ரீதர் ஆகியோருக்கு பட்டு சால்வை மாலை தங்க மோதிரம் அணிவித்து,பூத் அளவில் பணிகளை சிறப்பாக செய்த 14 நபர்களுக்கு சால்வை அணிவித்து வெள்ளி காசு அளித்து கௌரவித்தார்.பகுதி கழக செயலாளர் வே. கருணாநிதிக்கு நினைவு பரிசு வழங்கினார்.உடன் இ.கருணாநிதி எம்.எல். ஏ.துணை மேயர் கோ.காமராஜ், கோல்டு.டி.பிரகாஷ், எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன், பி.கி.அ.சத்தியபிரபு, உள்ளிட்டோர் பங்கேற்றனர். வி.எஸ்.ஜெகநாதன் நன்றியுரையாற்றினார்.

முன்னாள் தி.மு.க. அமைப்புச் செயலாளர் சிறுகதை மன்னன் எஸ்.எஸ்.தென்னரசு அவர்களது மனைவி ஜாக்குலின் மறைவையொட்டி அன்னாரது உடலுக்கு அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திருமங்கலம் முத்தப்பன்பட்டியில் சட்டப்பேரவை முன்னாள் தலைவர்

சேடப்பட்டி இரா.முத்தையா 2ஆம் ஆண்டு நினைவேந்தல்!

அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று நலத்திட்ட உதவிகள் வழங்கல் - கழகத்தினர் - பொதுமக்கள் பங்கேற்பு!

மதுரை, செப் 19-

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதி தே.கல்லுப்பட்டி ஒன்றியத்தில் உள்ள முத்தப்பன்பட்டியில் அமைந்திருக்கும் முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி இரா.முத்தையா அவர்களின் நினைவு மண்டபத்தில் அவரது இரண்டாம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்ச்சி வரும் 21ஆம் தேதி வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. இதில் அமைச்சர் பெருமக்கள், கழகத்தினர், பொதுமக்கள் பெரும் திரளானோர் பங்கேற்க உள்ள நிலையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளது. அதன் விபரம்,

சேடப்பட்டி இரா.முத்தையா என்றழைக்கப்படும் முன்னாள் சபாநாயகரென்ற பெருமைக்குரியவர் கடந்த 1942 ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் தேதி பேரையூர் தாலுகா, சேடப்பட்டி தொகுதி, முத்தப்பன்பட்டி கிராமத்தில் ராமசாமி தேவர் சீதையம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாக பிறந்தார்.

தமது பள்ளிப்படிப்பை பேரையூரில் உள்ள அரசு பள்ளியில் பயின்றவர், பின் 1961 ஆம் ஆண்டு மதுரை தியாகராசர் கல்லூரியில் கல்லூரி படிப்பை பயின்றார். கல்லூரிப் படிப்பின் போது பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்ட பெரும் பற்று காரணமாக தி.மு.க.வில் பணியாற்ற வேண்டும் என்ற மிகுந்த உணர்வோடு இளமையிலேயே கழகத்தில் தீவிர செயலாற்ற தொடங்கினார். மாணவர் தி.மு.க.வில் மிகுந்த ஈடுபாடுடன் தம்மை ஐக்கியமாக்கி கொண்டு எல்லோரும் பாராட்டு வகையில் செயலாற்றினார். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் முன் நின்று நடத்தி வெற்றி கண்டு பல முறை சிறை சென்று பல் வேறு சிறைச்சாலைகளில் பல துயரங்களை அனுபவித்தார்.

1965இல் இந்தியாவே எதிர்நோக்கி வியப்புடன் பார்த்த மாபெரும் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் மாணவர் தி.மு.க. சார்பில் தலைமையேற்று வழிநடத்தி போராட்டம் பல கண்டு அதிகமான நாட்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டார். இப்படி போராட்டத்திற்கு அஞ்சாமல் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உத்தரவினை முதற்கடமை என பாவித்து அயராது பாடுபட்டு அவர்களிடம் நட்பெயரும் பெற்றார்.

தமது கல்லூரி மாணவப் பருவத்தில் கழகப் பணியில் பெருமை கொள்ளும் வகையில் மாணவர்களை ஒன்றிணைத்து பல்வேறு போராட்டம் மற்றும் நகரங்கள், கிராமங்கள் தோறும் சென்று தீவிர செயலாற்றியதால் கழகத்தினராலும், மாணவர்களாலும் 1965 முதல் 1970 ஆண்டு வரை மாணவர் தலைவர் இரா.முத்தையா என்று பெருமையோடு அழைக்கப்பட்டார்.

மேலும் தமது சீறிய ஆற்றலினால் சேடப்பட்டி தொகுதியில் நான்கு முறை போட்டியிட்டு அத்தொகுதி மக்களால் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். இதனால் அத்தொகுதி மக்களால் செல்லமாக சேடபட்டியார் எனவும், சேடப்பட்டி முத்தையா என்றும் அன்போடும் பாசத்தோடும் எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

சட்டமன்ற சபாநாயகராக பணியாற்றியதன் பயனாக சட்டமன்ற செயல்பாடுகளை நன்கு அறிந்து சட்டப்பேரவை தொடர்பான எந்த ஒரு ஊடக விவாதத்தில் விளக்கம் கேட்டாலும் சட்டப்பேரவையின் விதிகள் குறித்து விரல் நுனியில் வைத்திருந்து சட்டபூர்வமான வாதங்களை எடுத்துக் கூறும் ஆற்றல் மிக்கவர், தனது சொந்த தொகுதியான சேடபட்டியில் பட்டி தொட்டிகளில் எல்லாம் உள்ள கழகத்தினர் பொதுமக்கள் மத்தியில் தொகுதி மக்கள் பெயர்களை கூறி அவர்களுடன் அன்போடு உறவாடுவார், தேர்தலில் தட்டி கொடுத்து உங்களில் நான் ஒருவன் என்று எளிமையாக நேரில் பழகும் குணம் கொண்டவர் என எல்லோராலும் பாராட்டு பெற்றவர் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களிடம் நன்கு பழகி அவர்களிடம் அன்பும் பாசமும் பெற்று முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆணைக்கினங்க கழகத்தின் மாநில தேர்தல் பணிக்குழு செயலாளராக பதவி வகித்து சீரிய முறையில் செயலாற்றினார்.

நம் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அன்பும் பாசமும் மரியாதையும் பெற்றவர் சேடப்பட்டி இரா.முத்தையா ஆவார். அவரது வழியில் அவரது புதல்வர் சேடப்பட்டி மு.மணிமாறன் கழகத்தின் ஒன்றிய செயலாளராக கழகப் பணியில் சிறப்பாக பணியாற்றி கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மதுரை தெற்கு மாவட்ட செயலாளராகவும் கழக பணியாற்றி வருகின்றார்.

பல்வேறு சாதனை படைத்து கழகத்திற்கு அரும்பாடு பட்டு எல்லோராலும் சேடபட்டி இரா.முத்தையா என்றழைக்கப்பட்ட பெருமைக்குரியவர் தமது வாழ்நாள் இறுதி வரை கழகப் பணியாற்றி கடந்த 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் தேதி இயக்கை எய்தினார்.

அன்னாரின் இரண்டாம் ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு வருகிற 21.09.2024ந்தேதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை வரை அவரது சொந்த ஊரான முத்தப்பன்பட்டியில் அமைந்துள்ள அவரது நினைவு மண்டபத்தில் நடைபெற உள்ளது. இதில் அமைச்சர் பெருமக்கள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்க உள்ளனர்.

மேலும் நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
திருச்சிராப்பள்ளி கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 24 / 2024-25 / தவஅ / நாள்: 12.09.2024

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருச்சிராப்பள்ளி வட்டம், அவர்களால், 2024-25-ம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், **நாகப்பட்டினம்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணி, மயிலாடுதுறை** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணி மற்றும் திருவாரூர்** (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த **1 பணிக்கு** இணையவழியில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **22.10.2024 அன்று 14.00 மணி** வரை (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் 23.09.2024 முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப வட்டம், திருச்சிராப்பள்ளி-20

செ.ம.தொ.இ/3741/ஒப்பந்தப்புள்ளி/2024

வடக்கு மண்டல பொறியாளர் அணியின் ஆய்வு கூட்டம் திருவள்ளுவர் மத்திய மாவட்டத்தில் நடைபெற்றது. இதில் மாநில பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன், அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணாநிதி, மாநில பொறியாளர் அணி துணைத் செயலாளர்கள் ஈ.ரா நரேந்திரன், உமா காந்த், சி. பிரதீப் இ.ரா பரமேஷ் குமார் ஆகியோர் ஆலோசனை வழங்கி பேசினர். இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் திண்ணனூர் மோகன் வரவேற்றுப் பேசினார். திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாறர் ஆரணி எஸ். ரோஸ் பொன்னையன், மாவட்ட தலைவர் பிரசாந்த், துணைத் தலைவர் துளசிராமன் மற்றும் தமிழ் பிரியன், காண்டீபன், மணிகண்டன் கோகுல்நாத், தேவராஜ், கௌரி சங்கர், பிரபாகர், விக்கி உள்ளிட்ட சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையில் புதிதாக

2 வாகன ஓட்டுநர்கள் - 1 வாகன சீராளருக்குப் பணி நியமன ஆணைகள்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

சென்னை, செப். 19 -

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் புதிதாக இரண்டு வாகன ஓட்டுநர்கள் -

கருணை அடிப்படையில் ஒரு வாகன சீராளர் ஆகியோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இரண்டு வாகன ஓட்டுநர்கள், ஒரு வாகன சீராளர் என மூவருக்கும் தலைமைச் செயலகத்தில் நேற்று (18.9.2024) பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்கள், அறிவிப்புகள், அரசின் சாதனைகள், செய்தி வெளியீடுகள், அறிக்கைகள், வேண்டுகோள்கள் அனைத்தும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் அரும்பணிகளைத் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை மிகச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், செய்தி மக்கள் தொடர்புத் துறையில் காலியாக இருக்கும் திருப்பூர் மாவட்ட ஓட்டுநர் பணியிடத்திற்கு ஆனந்தன், திருப்பத்தூர் மாவட்ட ஓட்டுநர் பணியிடத்திற்கு எம். தமிழரசு ஆகியோரையும், மதுரை மாவட்டத்தில் வாகன சீராளர் பணியிடத்திற்குக் கருணை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள திருமதி.வெ.சித்ராதேவி அவர்களையும் பணி நியமனங்கள் செய்து உரிய ஆணைகளை தலைமைச் செயலகத்தில் நேற்று (18.9.2024) நேரில் வழங்கி, வாழ்த்துகள் கூறியதுடன் சிறப்பாகவும் பொறுப்பாகவும் பணிபுரியுமாறும் அறிவுரைகள் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் செயலாளர் வே.ராஜாராமன், மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ்.செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்

பல்லாவரம் தெற்கு பகுதிக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

இ.கருணாநிதி, எம்.எல்.ஏ. - எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ. - நிர்வாகிகள் பங்கேற்பு

காஞ்சிபுரம், செப். 19 -

பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் இன்று நடைபெறுகிறது. மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா மற்றும் நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

2026சட்டமன்றத் தேர்தலை மிகச்சிறப்பான முறையில் எதிர்கொள்வதற்காக பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.கழக பொது உறுப்பினர்கள் இன்று 19ஆம் தேதி மாலை 4.00 மணியளவில் பல்லாவரம் 200 அடி சாலையில் அமைந்துள்ள எஸ்.எம். பி.மகால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

பல்லாவரம் தெற்கு பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னாட் இப்பொது உறுப்பினர்கள் கூட்டத்திற்கு தலைமை வகிக்கிறார்.

பகுதி கழக அவைத் தலைவர் வை.தா.ர.மூர்த்தி அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். பகுதி கழக துணைச் செயலாளர்கள் வி.கர்ணல், இ.வெங்கடேசன், பி.மீனா, பகுதி பொருளாளர் ஆர்.செந்தில்குமார், மாநகரப் பிரதிநிதிகள் டி.பார்த்திபன், பி.ராமகிருஷ்ணன், ஜெ.சுரேஷ்குமார், ஏ.ராமச்சந்திரராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், பல்லாவரம் மண்டலக் குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, செம்பாக்கம் வடக்கு பகுதி செயலாளர் ஏ.கே.கருணாகரன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் மு.ரஞ்சன், ஆர்.எஸ்.சங்கர், மாவட்டப் பிரதிநிதிகள் த.ராஜாராமன், க.தனசேகரன், குளத்துமேடு மு.நாகலிங்கம், க.ரமேஷ், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர் வே.தாமோதரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.இன்சமாம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி டி.ராஜலிங்கம், மருத்துவர் அணி என்.எஸ்.கண்ணன், எம்.கமல்ராஜ், ஏ.அசோக்குமார், எஸ்.மணிரத்தினம், பழனிவேல், எஸ்.பிரதிபா,

வட்ட கழகச் செயலாளர்கள் வி.என்.சிலம்பரசன், எம். முருகையன், பி.வெங்கடேசன், எஸ்.முஜிபுர்ரகுமான், டி.கன்னியப்பன், ஆர். காமேஷ்வரன், மாமன்ற உறுப்பினர்கள் பிருந்தாதேவி சிலம்பரசன், கலைச்செல்வி, வெங்கடேசன், கீதா நாகராஜ், மகேஸ்வரி கார்த்திகேயன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

தாம்பரம் மாநகர - வது வட்டச் செயலாளர் ஆர். கே.நாகராஜன் நன்றியுரையாற்றுகிறார்.

இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை பல்லாவரம் தெற்கு பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னாட் முன்னின்று செய்து வருகிறார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் வருகிற 21.09.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.வி.கோகுலக்கண்ணன், க.செல்வம் எம்.பி., கு.மலர் விழி, மாவட்ட பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் செயலாளர்கள் கழக அணிகளின் மாநில மாவட்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளீட்ட அனைவரும் கலந்துக்கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. செப்.28, அன்று காஞ்சிபுரத்தில் **கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்** அவர்களின் தலைமையில் அனைத்துக் கட்சி தலைவர்கள் பங்கேற்கும் கழக பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம் சம்பந்தமாக.

2. கழக ஆக்கப் பணிகள்.

க.சுந்தர், எம்.எல்.ஏ.
செயலாளர்,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

பெருநகர சென்னை மாநகராட்சி

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1)ன் கீழ்)

2024- ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு, மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேயர்

செ.ம.தொ.இ / 964 / வரைகலை / 2024

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	த.பொ. / செ / தெற்கு	128	1
2	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி	55, 56	2

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/3779/ஒப்பந்தப்புள்ளி/2024

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய ஊர் தோறும் கழக கொடி ஏற்றும் நிகழ்ச்சி திருவள்ளூர் கிழக்கு ஒன்றியத்தில் பல்வேறு இடங்களில் மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில் முன்னாள் ஒன்றிய செயலாளர் கழக மூத்த முன்னோடி சட்ட எரிப்பு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறைக்கு சென்றவர் திருமலைலோகநாதன் கழக கல்வெட்டைத் திறந்து வைத்து கழக கொடியை ஏற்றி வைத்தார். உடன் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.மகாலிங்கம் சி.ஜெயபாரதி, களம்பாக்கம் எம்.பன்னீர் செல்வம், வழக்கறிஞர் ராஜா, ஜெ.ரமேஷ், வி.ஜெகதீசன், ஏ.பி. செந்தில்குமார்,மூர்த்தி, சிவக்குமார், செல்வம், சுரேஷ். பாபு, தாமு, உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்